2014 ஆகஸ்ட் 5]

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் ஏறக்குறைய 50-க்கும் மேற்பட்ட கவன ஈர்ப்பு அறிவிப்புகளை நான் கொடுத்திருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படியெல்லாம் நீங்கள் கூற முடியாது. துறையிலிருந்து விளக்கம் வந்தவுடன், ஒவ்வொன்றாக நான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். உங்களுக்கு காலையிலேயே பதில் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) நீங்கள் காலையில் என் அறையில் வந்து இதுகுறித்து கேட்டபோது, உங்களுக்கு விளக்கம் சொல்லிவிட்டேன். மீண்டும், வேண்டுமென்றே, தேவையில்லாமல், அவையில் raise பண்ணுவது முறையல்ல. ஒவ்வொரு கவன ஈர்ப்பாக நான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) துறைகளிலிருந்து விளக்கங்கள் கிடைக்கப்பெற்றவுடன், ஒவ்வொரு கவன ஈர்ப்பாக நான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். நீங்கள் வேண்டுமென்றே, பிரச்சினை பண்ணுவதற்காக கேட்டால் நான் என்ன செய்வது? (குறுக்கீடு) அதெல்லாம் செய்ய முடியாது. உட்காருங்கள்.

4. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், பொதுக் கணக்குக் குழுத் தலைவர்.

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர். க. கிருஷ்ணசாமி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும்.

*திரு. பி.வி. கதிரவன்: *பொதுக் கணக்குக் குழுவின் 2013–2014 ஆம் ஆண்டிற்கான 213 முதல் 223 வரையிலான 11 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். நீங்கள் உட்காருங்கள். இன்றைக்கு நிறைய அலுவல்கள் இருக்கின்றன. நீங்கள் உட்காருங்கள்.*

5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு, 2014

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியின்மையைத் தடுக்கும்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். இவ்வளவு பிடிவாதமாக நீங்கள் நிற்பது சரியல்ல. உங்களுக்குப் பதில் சொல்லிவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்குப் பதில் சொல்லிவிட்டேன், உட்காருங்கள். (குறுக்கீடு) இவையெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிந்தனைத் திறத்தால், சிறந்த நுண்ணறிவால், தமிழகத்தை உயர்த்திட்ட உலக அரசியல் சிற்பி, இயலாதோர்க்கு ஏணியாய், (மேசையைத் தட்டும் ஒலி) வறுமையில் உழல்பவருக்கு தோணியாய், வல்லரசும் வந்து வாழ்த்தும் வல்லமை கொண்ட ஞானியாய் விளங்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*